# யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
# கனிஷ்ட வித்தியாலயம்

## பாடசாலையின் பெயர் மாற்றம் செய்யப்பட்ட
## ஆறாவது ஆண்டு நிறைவுநாளும்
## பரிசளிப்பு விழாவும்
## தங்கமலர் வெளியீடும்

அதிபர் அறிக்கை

முதன்மை விருந்தினர்

**திரு செ.சந்திரராஜா அவர்கள்**
(வலயக்கல்விப் பணிப்பாளர் வலிகாமம் கல்வி வலயம்)

# PRIZEDAY - 2015
# PRINCIPAL'S REPORT

சிறப்பு விருந்தினர்கள்

**திரு சி.கந்தசாமி**
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

**திரு சு.சண்முககுலகுமாரன்**
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)

கௌரவ விருந்தினர்

**திரு எஸ். விக்னராஜா**
(ஓய்வு பெற்ற முகாமையாளர் இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்)

09.03.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுடவாசகம் :- கல்வியே கருந்தனம்

School Motto :- Education is the most wealth.

தூரநோக்கு :- சமநிலை ஆளுமையுடைய பிரஜைகளை உருவாக்குதல்

VISION :- Creating citizen of balance Personality.

பணிக்கூற்று :- கற்றலுக்குரிய கவிநிலையினூடாக அடைவு மட்டத்தை உயர்த்துதல்

Mission :- Through the learning Situation enhance the output level



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையில் எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வணங்கி கல்விக்கதிபதியான கலைவாணியின் திருப்பாதங்களைப் பணிந்து ஸ்ரீ துர்க்காதேவியின் பாதாரவிந்தங்களை வணங்கி இப் பாடசாலை வளர்ச்சிக்காக உழைத்த முன்னால் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் எமது பாடசாலைச் சமூகத்தினரை மனதில் நிறுத்தி இன்றைய நன்னாளில் இறை ஆசியுடன் 2015ம் ஆண்டுக்கான எமது பாடசாலையின் அதிபர் அறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய நன்னாளில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது வலிகாமம் வலயத்தின் வலயக்கல்விப்பணிப்பாளர் திருவாளர் எஸ்.சந்திரராஜா Sir அவர்களே! சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்துள்ள வலிகாமம் வலய கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.சி.கந்தசாமி அவர்களே! தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.சு.சண்முககுலகுமாரன் அவர்களே! கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ள இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற முகாமையாளர் திரு.எஸ்.விக்னராஜா Sir அவர்களே!

கல்விசார் உத்தியோகத்தர்களே!

பாடசாலையின் முன்னாள் அதிபர்களே!

பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்களே!

சகோதர பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே!

எமது பாடசாலையின் அன்பான ஆசிரியர்களே!

அன்பான மாணவச் செல்வங்களே!

வங்கி முகாமையாளர்களே!

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உத்தியோகத்தர்களே!

பழைய மாணவர்சங்க உறுப்பினர்ளே!

பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே!

நலன் விரும்பிகளே!

உங்கள் அனைவருக்கும் இனிய காலைவணக்கம்.

இன்றைய நாள் ஒரு மகத்தான நாள் பரிசளிப்பு நிதியத்தின் காரணகர்த்தாவும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான முன்னாள் தலைவரும் சிறந்த சமூக சேவகியுமான அமரர் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக அன்னையின் பெயரை எமது பாடசாலைக்கு பொறிக்கப்பட்ட நன்னாள். எமது பாடசாலையில் சாதனைகள் படைத்த, பரிசில்கள் பெற்ற மாணவர்களின் வெற்றிகளை மதித்துக் கௌரவிக்கும் பரிசுத்தின நிகழ்விற்கு வருகை தந்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அனைவருக்கும் எமது அதிபர் ஆசிரியர் மாணவர் சார்பில் நல்வரவு கூறுவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் கல்வித்தர மேம்பாட்டிற்கும் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மாவின் ஆசிகளை முதற்கண் வேண்டுகின்றேன்.

பிரதமவிருந்தினர் அவர்களே!

இன்றைய நிகழ்விற்கு வருகை தந்திருக்கும் வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் உயர் திரு.எஸ்.சந்திரராசா Sir அவர்களே! எங்கள் வேண்டுதலுக்கு இணங்கி வருகை தந்தமையை நினைத்து மகிழ்வடைகின்றேன். தானங்களில் சிறந்த தானம் கல்வித் தானம் என்பதை நன்குணர்ந்து கல்வித்தானத்தை வலிகாமம் கல்வி வலய மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு சகல வழிகளிலும் சிறந்த பணியாற்றுபவர். நேரில் சென்று பாடசாலைகளின் குறை நிறைகளை இனங்காண்பவர் எங்கள் வலயக் கல்விப்பணிப்பாளர். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் வலிகாமம் கல்வி வலயம் கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்து மிளிர வேண்டும் என்றும் பல சாதனைகளைப் படைக்க வேண்டுமென்ற நோக்கோடு பல்வேறு செயற்றிட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்தி வலிகாமம் கல்வி வலயத்தின் வளர்ச்சிக்கு பெரும்பணியாற்றி வருபவர்.

அனைத்துப் பாடசாலைகளும் சிறப்புடன் செயற்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். எங்கள் பாடசாலையின் ஆசிரியர் தேவைகளை நிறைவேற்றித்தருபவர். பாடசாலையின் வகுப்பறைகள் பற்றாக்குறையாக உள்ளமையை இனங்கண்டு புதிய இரண்டு மாடிக்கட்டிடத்திற்கான முன்மொழிவைச் செய்தவர். எமது பாடசாலையின் புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் தீவிர கரிசனை கொண்டவர். அறிவை வளர்க்கும் பாடசாலைகளுக்கு வேண்டிய ஆசிரிய ஆளணிகளையும் பௌதிக வளங்களையும் கேட்ட உடனேயே பெற்றுத்தந்து பாடசாலைகளின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் அரும்பணியாற்றுகின்ற தாங்கள் எமது பாடசாலைக்கு பிரதம விருந்தினராக வருகை தந்து மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்க வந்துள்ளமைக்கு எமது நன்றிகள். அவர் தம் சேவைக்காலத்தில் பதவியுயர்வுகள் பல பெற்று இன்புற்று வாழ இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

சிறப்பு விருந்தினர்களே!

இன்றைய நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பவர்களான வலிகாமம் வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.சி.கந்தசாமி Sir அவர்களே! தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.சு.சண்முககுலகுமாரன் Sir அவர்களே! எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்தமையை எண்ணி எமது பாடசாலைச் சமூகம் பெருமையடைகிறது.

திரு.சி.கந்தசாமி Sir அவர்கள் வலிகாமம் வலயப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கான செயற்பாடுகளைத் திட்டமிட்டு அதனை நடைமுறைப்படுத்தி மாணவர்களின் வளர்ச்சிக்காகவும் பாடசாலைகளின் உயர்விற்காகவும் அர்ப்பணிப்பாகக் கடமையாற்றி வருபவர். எமது பாடசாலையின் கல்வி அபிவிருத்திக்கு வேண்டிய உதவிகளைச் செய்பவர். நல்லுள்ளம் கொண்டவர். கல்விப்புலத்தோர் அனைவருடனும் சாந்தமாகப் பழகிக் கொள்பவர். தாங்கள் ஓய்வு பெறுவதற்கு சொற்ப நாட்களே உள்ளபோதிலும் நாம் தங்களை அணுகிக் கேட்டபோது எமது அழைப்பை மனமுவந்து ஏற்று இன்றைய விழாவில் கலந்து சிறப்பிப்பதற்கு எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் தனது ஓய்வுக்காலத்தில் நலமாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிறப்புவிருந்தினராகக் கலந்து விழாவைச் சிறப்பித்துக்கொண்டிருக்கும் எங்கள் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு.சு.சண்முககுலகுமாரன் Sir அவர்கள் மிகவும் செயற்றிறன் மிக்கவர், நல்லுள்ளம் கொண்டவர், கடமையுணர்வு மிக்கவர், எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகுந்த அக்கறை செலுத்துபவர், எமது பாடசாலையின் தேவைகளை உணர்ந்து அவற்றைப் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்பவர். பாடசாலையின் எந்தவொரு நிகழ்வுக்கும் மழையோ வெயிலோ பாராது தவறாது கலந்து சிறப்பிப்பவர். இவர் தனது தொழிற்புலத்தில் பல பதவி உயர்வுகள் பெற்று சிறப்படைய மனமார வாழ்த்துகின்றோம். எமது அழைப்பை ஏற்று வருகை தந்தமைக்கு எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

**கௌரவ விருந்தினர் அவர்களே!**

எமது பாடசாலையின் பழைய மாணவரும், இலங்கைவங்கியின் ஓய்வுபெற்ற முகாமையாளரும் சிறந்த பரோபகாரியாகவும் அரிமா கழக உறுப்பினராகவும் இருந்து சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற திரு.எஸ்.விக்னராஜா அவர்கள் எமது பாடசாலைக்கு கௌரவ விருந்தினராக

வருகை தந்தமையை எண்ணி மகிழ்ச்சியடைகின்றோம். நீண்டகாலமாக எமது பாடசாலையில் நடைபெறுகின்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் பரிசளிப்புப் பொருள்களோ அல்லது நிதி உதவிகளோ அளித்து வருபவர். பரோபகார சிந்தனையுள்ளவர். மல்லாகம் பிரதேச சிறுவர்களின் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆங்கில அறிவு விருத்திக்காக மாதாந்தம் இரண்டாயிரம் (2000) ரூபாவைச் செலவிட்டு இலவசமாக ஆங்கில வகுப்புக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையில் நடாத்தி வருகின்றார். எமது பாடசாலைக்கு மைதானம் இல்லாமையை உணர்ந்து தனது சொந்தப்பணத்தில் மைதானத்தைக் கொள்வனவு செய்துதர முன்வந்துள்ளமை மிகவும் பாராட்டுக்குரிய விடயமாகும். தாங்கள் எங்கள் பாடசாலைக்கு ஆற்றுகின்ற இத்தகைய பணிகள் அளப்பரியன. இத்தகைய நல்லுள்ளம் கொண்டவர் எமது அழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்பித்தமைக்கு எமது நன்றிகள்.

### ஆசியுரை

ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானப் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள் அவர்கள் விளையாட்டுப்போட்டி, பரிசளிப்புவிழா போன்ற நிகழ்வுகளிற்கு மாணவர்களுக்குரிய பரிசுப் பொருள்களை அன்பளிப்பாக ஒவ்வோர் ஆண்டும் வழங்கி உதவியதுடன் எமது பாடசாலை வளர்ச்சியில் மிகுந்த பற்றுக்கொண்டவர். நல்லுள்ளம் உடைய அவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதம சிவாச்சாரியாக இருந்து அன்னையிடம் வரும் அடியவர்கள் அனைவருக்கும் அன்னையின் அருளாசி கிடைக்க வழி செய்பவர்.

### கல்வியில் கருத்தூன்றி நிற்கும் உத்தியோகத்தர்களே!

எமது பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு பல்வேறு துறைகளிலும் மேற்பார்வை செய்தும் ஒழுங்குபடுத்தியும் ஆலோசனை வழங்கியும் ஆளணி வளங்களைத் தந்துதவியும் வருகின்றீர்கள் உங்கள் அனைவருக்கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### அன்பான பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகள் பரிசுபெறுவதைக் கண்டு மகிழ்வதற்காக வருகை தந்துள்ளீர்கள். உங்கள் வருகையைக் கண்டு நாம் மகிழ்வடைகின்றோம். நீங்கள் எப்போதும் உங்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை உள்ளவர்களாக இருக்கவேண்டுமென இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன். உங்களது முழுமையான ஒத்துழைப்பே உங்கள் பிள்ளைகளினதும் எங்கள் பாடசாலையினதும் வளர்ச்சிக்கும் சாதனைகளுக்கும் மூல காரணமாகும்.

### என் இனிய மாணவர்களே!

உங்கள் பெற்றோர் நீங்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்லதோர் பிரஜையாக உருவாக வேண்டும் என்ற பேராவலோடு உழைக்கின்றார்கள். உங்களை உயர்ந்தவர்களாக நல்லவர்களாக தன்னலமற்ற சேவையுள்ளம் கொண்டவர்களாக வாழ்வதற்கு வழிகாட்டுவது எங்கள் கடமை என்பதை நாம் உணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுகின்றோம். நீங்கள் செல்லும் இடமெல்லாம் கல்வியிலும், பணியிலும், பழக்கவழக்கங்களிலும் சிறந்து விளங்கி ஆரம்பப் பாடசாலைத் தாயின் பெயரை நிலைநாட்டுவீர்களாக!

## எங்கள் வித்தியாலயம்

எமது வித்தியாலயம் ஆங்கிலேயரின் வருகையின் போது அமெரிக்கன் மிஷன் என்ற பெயருடன் சிறிய கல்வி நிலையமாக 1832ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பின்பு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கி வந்தது. 2009.03.09 முதல் யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் என்ற புதிய பெயருடன் இயங்கி வருகின்றது. இப்பாடசாலை பல் துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருவது யாவரும் அறிந்ததே. எமது பாடசாலைக்கு பெயர்மாற்றம் செய்யபட்ட நாளை நினைவு கூரும் வகையில் இன்றைய இந்த நன்னாளை எமது பாடசாலையின் பரிசுத்தினமாக பிரகடனம் செய்து பரிசளிப்பு விழாவினைக் கொண்டாடி வருகின்றோம்.

இங்கு அரசாங்கப் பாடத்திட்டத்துடன் தரம் 1 – 2 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மேலதிகமாக ஆசிரியர் ஒருவரை நியமித்து ஆங்கிலப்பாடம் கற்பிக்கப்படுகின்றது. தகவல் தொழில்நுட்பத்தின் அதி முக்கியத்துவத்தை உணர்ந்து தரம் 1 – 5 வரை அனைத்து மாணவர்களுக்கும் கணனிக் கல்வியை கற்பித்து வருகின்றோம்.

எமது பாடசாலை பிள்ளை நேயப் பாடசாலை அம்சங்களைக் கொண்ட முதன்நிலை ஆரம்பப் பாடசாலையாக மிளிர்கின்றது. எமது பாடசாலை மேலும் பலவழிகளில் வளர்ச்சிபெற பெற்றோர்களினதும், பழையமாணவர்களினதும் உதவிகள் தொடர்ந்தும் கிடைப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

## கல்விசார் செயற்பாடுகள்

எங்கள் வித்தியாலயம் முந்நூறிற்கும் மேற்பட்ட மாணவர்களை தன் நிழலில் அணைத்து பண்பாட்டு விழுமியங்களுக்கு ஏற்ப கல்வியில் உயர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. எமது மேற்பார்வையின் கீழ் இயங்கிவரும் கலைமகள் முன்பள்ளியில் அறுபதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

## ஆசிரியர் விபரம்

எமது பாடசாலையில் தற்போது பன்னிரண்டு ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

- அதிபர் - 01
- உப அதிபர் - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ❖ ஆரம்பக்கல்விப்பயிற்சி ஆசிரியர் | - | 09 |
| ❖ ஆங்கிலம் | - | 01 |
| ❖ கல்விசாரா ஊழியர் | - | 01 |

பழையமாணவர் நிதியில் கற்பிக்கும் ஆசிரியர்கள்

| | | |
|---|---|---|
| ❖ கணினி ஆசிரியர் | - | 01 |
| ❖ கல்வியற்கல்லூரி ஆசிரியர்கள் | - | 03 |
| ❖ அலுவலக எழுதுநர் | - | 01 |
| ❖ ஆங்கில ஆசிரியர் | - | 01 |

**இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள்**

**பெயர் :** திருமதி ஜெ.சதீஸ்
**கடமையேற்ற திகதி** : 10.03.2014
**இடமாற்றம் பெற்ற திகதி** : 13.10.2014
**பாடசாலையின் பெயர்** : யா/உடுவில் முருகமூர்த்தி (ஆரம்பக்கல்வி)

**பெயர் :** திருமதி ந.ட.தேவதயாளன்
**கடமையேற்ற திகதி** : 02.01..2014
**இடமாற்றம் பெற்ற திகதி** : 10.02.2014
**பாடசாலையின் பெயர்** : யா/அளவெட்டி தெற்கு அ.மி.த.க

**பெயர் :** திருமதி ம.தேவதயாளன்
**கடமையேற்ற திகதி** : 02.01..2014
**இடமாற்றம் பெற்ற திகதி** : 10.02.2014
**பாடசாலையின் பெயர்** : யா/ஏழாலை சைவமகாஜன வித்தியாலயம்

**கடமையுணர்வு மிக்க பிரதி அதிபர்**

இப்பாடசாலையில் கல்வி கற்பிக்கும் திருமதி பா.தவக்குமார் அவர்கள் மிகவும் சுறுசுறுப்பானவர். எமது பாடசாலையின் பிரதி அதிபராக இருந்து தனது கடமைகளைத் திறம்பட நிறைவேற்றுபவர். பாடசாலையின் செயற்பாடுகளில் முழு மனதுடன் பூரண ஒத்துழைப்பு நல்கி அதிபருக்கு உதவியாகச் செயற்பட்டு வருபவர். பாடசாலைச் சமூகத்தில் நன்மதிப்புப் பெற்றவர். மாணவர்களின் நலனிலும் கல்வியிலும் பாடசாலை வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை உடையவர். அவரது பணி சிறக்க வாழ்த்துகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அயரது உழைக்கும் ஆசிரியர்கள்

பாடசாலையின் முகாமைத்துவமும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் நல்ல முறையில் நடைபெற ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் முழு ஒத்துழைப்பு நல்கி புரிந்துணர்வுடன் செயற்படும் ஆசிரியர்களே பாடசாலையின் வளர்ச்சிக்கு காரணமானவர்கள். மாணவர்களின் கல்வி ஒழுக்கம் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஊக்கத்துடன் செயற்பட்டு பாடசாலைக்குப் பெருமை பெற்றுத்தருபவர்கள். மாணவச் செல்வங்களுக்கு சிறந்த வழிகாட்டி அவர்களின் சாதனைகளுக்கு கர்த்தாக்களாக இருப்பவர்கள் அதிபரிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி பாடசாலையின் வளர்ச்சியிலும் மாணவர் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டவர்கள் கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையின் நோக்கில் சிறந்த திட்டமிடலுடன் பல்வேறு செயற்பாடுகளை முன்வைத்து விடாமுயற்சியுடன் அயராது உழைத்து அதியுயர் பெறுபேறுகளைப் பெற்று எமது பாடசாலையின் பெயரை எல்லோர் மனதிலும் நிலைக்கச் செய்வதுடன் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தில் முதல் நிலைப்பாடசாலையாக மிளிரச் செய்தமை இந்த ஆசிரியர் குழாமையே சாரும்.

## மாணவர்களின் சாதனைகள்

தரம் - 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளே இப்பாடசாலையின் தரக்காட்டிகளாக உள்ளன. கடந்த வருடம் (2014) நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 69 மாணவர்கள் தோற்றி 21 மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். 100 புள்ளிகளுக்கு மேல் 41 மாணவர்கள் பெற்றுள்ளனர். 70 புள்ளிகளுக்கு மேல் 51 மாணவர்கள் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இதுவரை காலமும் இல்லாத வகையில் 2014ம் ஆண்டு முதன் முறையாக 21 மாணவர்கள் சித்தியெய்தி தெல்லிப்பழைக் கோட்டத்தில் முதற்தர ஆரம்பப் பாடசாலையாக எமது பாடசாலை திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் வெற்றியை எமது பாடசாலைக்கு அளித்த மாணவச் செல்வங்களையும் அதற்கு உந்து சக்தியாக அமைந்து தரம் 1 - 5 வரை கற்பித்த சகல ஆசிரியர்களையும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுவதில் பெருமிதம் அடைகின்றேன். எதிர் காலத்தில் அவர்கள் மேலும் சிறந்த சாதனைகள் படைத்து ஞாலம் போற்றும் நற்பிரஜைகளாக வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

## பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர்.

செல்வன் ரவிச்சந்திரன் கஜீபன்

செல்வி ஜெகதீஸ்வரன் சிவப்பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி நகுலன் யதீஷா

எமது கற்றல் செயற்பாட்டில் ஏற்பட்ட இப் படிநிலை வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ள எமது பாடசாலை ஆசிரியர்கள் பாராட்டிற்குரியவர்கள். மாணவர்கள் ஐந்து ஆண்டுகளாக இத்தகைய ஆற்றலை வளர்ப்பதில் தமது பொறுப்பினை நன்குணர்ந்து மாணவர்களை ஊக்குவித்து வழிகாட்டியமை இப்பாடசாலையின் சகல ஆசிரியர்களினதும் ஒட்டு மொத்தப்பணி என்பது குறிப்பிடத்தக்கது. தரம் 4,5 வகுப்புகளில் மேலதிக நேரங்களில் தமது சுக துக்கங்களை மறந்து அர்ப்பணிப்போடு சேவையாற்றிய செல்வி ந. சாரதா, திருமதி க. தேவகுமார் திருமதி அ. அருந்தவநாதன் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

## ESDFP செயற்றிட்டம்

மாணவர்களின் கற்றல் திறனை விருத்தி செய்யும் முகமாகவும் ஆசிரியர்களின் ஆளுமையை மேம்பாடடையச் செய்யும் முகமாகவும் கடந்த ஆண்டு ESDFP செயற்றிட்டத்தின் மூலம் பின்வரும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மாணவர்மட்டச் செயற்பாடுகள்

- வாசிக்கும் திறன் விருத்தி
- மொழித்திறன் விருத்தி
- வாசிப்புத்திறன் விருத்தி
- கணிதத்திறன் விருத்தி
- சிங்களமொழி விருத்தி
- உடலியக்கச் செயற்பாடு

ஆசிரியர்மட்டச் செயற்பாடுகள்

ஆசிரியர்களின் வாண்மையை விருத்தி செய்யும் நோக்குடன் உரிய வளவாளர்களை அழைத்து மேற்கொள்ளப்பட்ட செயலமர்வுகள்.

1. சிங்களமொழித்திறனை விருத்தி செய்தல்.
2. அழகியல் செயற்பாடுகள்
3. கடதாசி ஆக்கம்
4. சித்திரம்
5. மூலிகைகளை இனங்காணலும் வகைப்படுத்தலும்
6. விஞ்ஞானச் செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளும் வெற்றிகளும்

## தமிழ்மன்றம்

பொறுப்பாசிரியர் :- செல்வி ந. சாரதா

எமது பாடசாலையில் இயங்கிவரும் தமிழ் மன்றமானது மாணவர்களின் தமிழ் அறிவை மேம்படுத்தும் நோக்கில் வாசிப்புத்திறன், ஆக்கத்திறன், பேச்சுத்திறன், ஆற்றுகைத்திறன் போன்றவற்றை விருத்தி செய்யும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது. கலைத்துறைச் செயற்பாடுகளில் மாணவர்களின் திறன்களை ஊக்குவிக்கவும் தலைமைத்துவப் பண்பு விருத்தியை வளர்த்து எடுக்கவும் பொறுப்பாசிரியர்கள் மன்றச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றனர்.

### தமிழ்த்தினப் போட்டி

| நிகழ்ச்சி | பெயர் | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|
| பாவோதல் | த.தரணிகா | 3 | - |
| பேச்சு | ஜெ.சிவப்பிரியா | 2 | - |
| கதைகூறல் | த.டனுஸ்ரன் | 2 | 3 |

## இந்துமன்றம்

பொறுப்பாசிரியர் :- திருமதி.யோ.சூரியகுமார்

இந்துமன்றமானது மாணவரிடையே இறை நம்பிக்கையை சமய அறிவையும் வளர்க்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அதுமட்டுமன்றி நவராத்திரிவிழா, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மாவின் குருபூசை காலங்களிலே மாணவர்களிடையே போட்டிகளை நடாத்தி சான்றிதழ்களை வழங்கி ஊக்குவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆங்கிலமன்றம்

பொறுப்பாசிரியர் :- திருமதி.ய.சத்தியமூர்த்தி

சர்வதேச மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தரம் - 1 – 5 வரை சகல வகுப்புகளிற்கும் ஆங்கில மொழி கற்பிக்கப்படுகின்றது. மாணவர்கள் கோட்ட வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

| Event | Name | Divisional |
|---|---|---|
| Copy Writing | T.Tharanika | 1 |
| Group Song | Grade - 4 | 3 |
| Dictation | S.MathulanShanthosh | 13 |
| Drama | Grade - 4 | 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Group Song | Grade - 2 | 1 |
| Group Song | Grade - 3 | 3 |

### சித்திரப்போட்டி

| | கோட்டம் | வலயம் |
|---|---|---|
| கோ. ரதுஷிகா (தரம் -2) | 1 . | ..... |

### சிங்கள வினாடி வினாப் போட்டி

| | |
|---|---|
| தரம் 1 | 2 |
| தரம் 2 | 1 |
| தரம் 3 | 2 |
| தரம் 5 | 1 |

### விரைவுகணிதப்போட்டி

| | | |
|---|---|---|
| கோ. ரதுஷிகா | 1 | 3 |
| சி.ஆரபி | 4 | |
| நா. சிந்தூரி | 3 | |
| றா. ஜனனிகா | 5 | |
| த.டனுஸ்ரன் | 5 | |

### பாடசாலை அபிவிருத்திக்குழு

பாடசாலையின் அபிவிருத்திக்கு பெருமளவில் உதவி செய்யும் அமைப்பாக இச் சங்கம் விளங்குவது குறிப்பிடத்தக்கது. பாடசாலைக் கல்விசார் வளங்கள், பௌதீக் வளங்கள் ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதில் பக்க பலமாக இயங்கி வருகின்றது. இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் இக் குழுவின் செயலாளர் திரு.பொ.சபீந்திரன், பொருளாளர் திருமதி.பா.தவக்குமார், உறுப்பினர்கள் திருமதி.சி.பரமசிவம், (ஆசிரியர்) செல்வி.ந.சாரதா,(ஆசிரியர்) திருமதி.சு.சிவலிங்கம், (ஆசிரியர்) திருமதி.த.பிறேம்குமார், (ஆசிரியர்) திரு.ஐ.சிவலோகநாதன், திரு.அ.ஜெயக்குமார், திருமதி.சி.மங்களம், திருமதி.வ.தவரூபன், திருமதி.யோ.யாழினி, திரு.செ.ஜெயானந்தகுமார், திரு.எஸ்.விக்னராஜா, வலயக்கல்விப் பிரதிநிதியாகிய ஜெ.மயில்வாகனம் ஆகியோர் இணைந்து பாடசாலையின் வளர்ச்சியில் மிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறப்பட்ட அன்பளிப்புகள்

| | | |
|---|---|---|
| கணனி | - 01 | செல்வி. சர்வேஸ்வரன் கேனுஜா |
| Colour Printer | - .01 | செல்வி. சாரதா நவரத்தினம் (ஆசிரியர், யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்.) |
| மைதானக் கொள்வனவு அன்பளிப்பு | - | |

பரிசளிப்பு விழாவிற்கான அன்பளிப்புகள்

1. யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பரிசளிப்பு நிதியம் - 46 000.00
2. துளசி உருத்திரன் ஞாபகார்த்தப் பரிசு - 6 000.00
3. மைதானக் கொள்வனவிற்கான அன்பளிப்பு - 325 000.00

அன்பளிப்புகளை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் இந்த வேளையில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதோடு இவ்வாறான நல்லுள்ளங்களின் செயற்பாடுகளை வரவேற்க எந்த வேளையிலும் தயாராக உள்ளோம்.

பாடசாலையிலுள்ள நிதியங்கள்.

| ஆரம்பித்தவர் பெயர். | நிதியத்தின் பெயர் | நோக்கம் |
|---|---|---|
| ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் | கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பரிசளிப்பு நிதியம் | ரூபா.50000.00 வைப்பிலிடப்பட்டு அதன் மூலம் பெறப்படும் வட்டிப்பணத்தில் பரிசளிப்பு விழா நடாத்துதல் |
| திரு மு.உருத்திரன் | துளசி உருத்திரன் ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம் | வருடாந்தம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு பரிசில் வழங்குதல். ஒரு மாணவருக்கு 1000 ரூபா வீதம். |
| திருமதி தவமணிதேவி குலசிங்கம். திருமதி யோகேஸ்வரி ஸ்ரீ ரவீந்திரன் | செல்வி. பகவதி நவரட்ணம் | ரூபா 50000.- வைப்பிலிடப்பட்டது வட்டிப்பணத்தில் வருடாந்தம் ஆங்கில தின விழா நடாத்துதல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை.

இன்றைய விழாவிற்கு பெரும் வேலைப் பழுவின் மத்தியிலும். பிரதமவிருந்தினராக வருகை தந்து விழாவைச் சிறப்பித்த வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் உயர் திரு.எஸ்.சந்திரராசா Sir அவர்களுக்கு எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராக வருகை தந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாமம் வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.சி.கந்தசாமி Sir அவர்களுக்கும் எங்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.சு.சண்முககுலகுமாரன் அவர்களுக்கும், எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அடுத்து கௌரவ விருந்தினராக வருகை தந்து விழாவைக் கௌரவித்துக் கொண்டிருக்கும் இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற முகாமையாளர் திரு.எஸ்.விக்னராஜா அவர்களுக்கு எமது மனப் பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய விழா சிறக்க நல்லாசிகள் வழங்கிச்சென்ற ஆசியுரை வழங்கிய தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானப் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள சிவாச்சாரியார் அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணைபுரிகின்ற வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்துஅலுவலர்களுக்கும் இன்றைய நிகழ்வுக்கு வருகை தந்துள்ள ஆசிரிய ஆலோசகர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், உத்தியோகத்தர்கள், வங்கி முகாமையாளர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

எமது பாடசாலையில் தேவைகள் ஏற்படும்போது அவ்வப்போது ஒத்துழைப்பு வழங்கிவருகின்ற வலிவடக்கு பிரதேசசபை தவிசாளர் , மற்றும் உறுப்பினர்கள் , உத்தியோகத்தர்கள் , பொதுச்சுகாதார பரிசோதகர் ஆகியோருக்கு எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இந்நிகழ்விற்கு பணமாகவோ பொருளாகவோ உதவி நல்கிய உள்ளங்களிற்கும் இந்நிகழ்விற்கு மேடை, பந்தல், கதிரைகள், ஒலியமைப்பு, மின்பிறப்பாக்கி ஆகியவற்றை வழங்கி உதவிய அனைத்து உள்ளங்களிற்கும் பாடசாலை அபிவிருத்திச்சங்க, பழையமாணவர் சங்க செயலாளர்கள், உறுப்பினர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும், இன்றைய விழாவில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய பரிசளிப்பு விழாவை சிறப்புற ஒழுங்குபடுத்தி நடாத்திக்கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கும் கலைநிகழ்வுகளை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் எனது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக இன்றைய நிகழ்வில் பங்கேற்ற அனைத்து இனிய உள்ளங்களுக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org